
பாதுகாப்பு அமைச்சகம்
8
சீர்திருத்தங்களின்
ஆண்டுகள்
June 2022
www.mod.gov.in

“

**பாதுகாப்பின் அடிப்படை கொள்கை என்பது, உங்களது தேவைகளின் அடிப்படையிலான மற்றும் தனித்துவமான அமைப்பு இருக்க வேண்டும். அப்போதுதான் அது உங்களுக்கு உதவும். 10 நாடுகளில் ஒரே மாதிரியான பாதுகாப்பு சாதனங்கள் இருந்தால், உங்களது ராணுவத்துக்கு தனித்துவம் எதுவும் இருக்காது. நீங்களே உங்களது நாட்டில் சாதனங்களை உருவாக்கினால் மட்டுமே, தனித்துவம் மற்றும் வியத்தகு அம்சங்கள் இருக்கும்.**

**பிரதமர் திரு. நரேந்திர மோடி**

(பாதுகாப்புத் துறையில் சுயசார்பு - செயல்பாட்டுக்கான அழைப்பு என்ற தலைப்பில் நடைபெற்ற பட்ஜெட்டுக்குப் பிந்தைய காணொலி கருத்தரங்கில்)



# வலுவான பாதுகாப்பு, தேசத்தின் நம்பிக்கை

- 8 ஆண்டுகளில் இதுவரை இல்லாத அளவுக்கு சீர்திருத்தங்கள் மற்றும் ராணுவ நவீனமயமாக்கல்
- உலகின் இரண்டாவது மிகப்பெரும் ராணுவத்துக்கு அதிநவீன ஆயுதங்கள் மற்றும் கட்டமைப்புகள்
- விமானப் படையின் போர்த் திறனை வலுப்படுத்திய ர:ஃபேல் மற்றும் இலகுரக தேஜாஸ் விமானம்
- பாதுகாப்புத் துறையில் தற்சார்பு: இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிகள், கடற்படையின் திறனை மேலும் வலுப்படுத்தியுள்ளன
- இந்தியாவில் தயாரிக்கப்பட்ட டாங்கிகள், ஏவுகணைகள், கையெறி குண்டுகள் ஆகியவற்றின் மூலம் ராணுவத்துக்கு கூடுதல் பலம்
- எல்லை கட்டமைப்பு மேம்பாடு மூலம் பாதுகாப்புப் படையினரின் போக்குவரத்து எளிதானது
- பாதுகாப்புப் படை பொறுப்புகளில் சமமான பங்களிப்பை அளிக்கும் பெண் வீராங்கனைகள்



# அக்னிபத்


- பாதுகாப்புப் படைகளில் 4 ஆண்டுகளுக்கு **அக்னிவீரர்களாக** இளைஞர்களை சேர்க்கும் நடைமுறையானது, ஆட்கள் தேர்வில் மாற்றமிகு சீர்திருத்தமாக அமைந்துள்ளது.
- 17.5 வயது முதல் 21 வயது வரையான ஆண்கள், பெண்கள் என இருபாலருக்கும் வாய்ப்புகள் (முதல் ஆண்டில் பணியில் சேருவோருக்கு 2 ஆண்டுகள் வயது தளர்வு - அதாவது, 23 வயது வரை சேர வாய்ப்பு)
- பாதுகாப்புப் படைகளை இளமையானதாக மாற்றுவதற்காக கொண்டுவரப்பட்டது; **புதிய ஆர்வத்தையும், உணர்வையும்** ஏற்படுத்தும்
- அதிக அளவில் தொழில்நுட்பத்தை நோக்கிய மாற்றம்
- தகுதி மற்றும் பாதுகாப்புப் படைகளின் தேவை அடிப்படையில் 25 சதவீத அக்னிவீரர்களுக்கு நிரந்தரப் பணியில் சேர வாய்ப்பு

**ராணுவம், கடற்படை மற்றும் விமானப் படைகளில் ஆட்கள் தேர்வுக்கான அறிவிக்கை ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது!**



# ‘அக்னிவீரர்களுக்கு’ ஆதரவு அளிக்கும் நடவடிக்கைகள்

## 4 ஆண்டுகள் பணிக் காலத்துக்குப் பின்...



- **பாதுகாப்பு அமைச்சகத்தில் 10% பணியிடங்கள் ஒதுக்கீடு**
  இந்திய கடலோர காவல் படை, பாதுகாப்புத் துறையில் ராணுவம் அல்லாத சிவிலியன் பணியிடங்கள் மற்றும் பாதுகாப்புத் துறையின் 16 பொதுத்துறை நிறுவனங்களிலும் வாய்ப்பு

- **உள்துறை அமைச்சகத்தில் 10% பணியிடங்கள் ஒதுக்கீடு**
  மத்திய ஆயுத காவல் படைகள், அசாம் ரைபிள்ஸ் 3 ஆண்டுகள் வயது தளர்வு; பணிப் பிரிவுக்கு 5 ஆண்டுகள்

- **இந்திய கடற்படையில் உள்ள வணிக கப்பல்களில் 6 பிரிவுகளில் தேர்வுசெய்யப்படுவதற்கான வாய்ப்புகள்**

- **தேசிய திறந்தநிலை பள்ளி நிறுவனத்தின் மூலம் கல்வித் திறனை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள்**
  10-ம் வகுப்பு தேர்ச்சிபெற்ற அக்னிவீரர்களுக்கு மேலும் படிக்கும் வாய்ப்பை அளித்து 12-ம் வகுப்பு சான்றிதழை கிடைக்கச் செய்யும் படிப்பை தேசிய திறந்தநிலை பள்ளி நிறுவனத்தில் வாய்ப்பு

- **மாநில காவல் படைகளில் முன்னுரிமை அடிப்படையில் தேர்வு**
  மாநில காவல் படையில் அக்னிவீரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

- **தொழில்முனைவோர் திறன் மற்றும் பணிக்கான திறன் மேம்பாடு**
  அக்னிவீரர்கள் பணியில் இருக்கும்போது திறன் இந்தியா சான்றிதழ் வழங்கப்படும். இது பல்வேறுபட்ட தொழில் தொடங்குவது மற்றும் பணி வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள உதவும்



# பாதுகாப்புப் படைகளுக்கான மிகப்பெரும் கொள்முதல்

## வலிமையான இந்தியாவின் வலிமையான ராணுவம்

# இந்திய விமானப்படை:
## கருட சக்தி

- இரண்டு போர் விமானப்படை பிரிவுகளை 32 ரஃபேல் போர் விமானங்கள் உருவாக்கியுள்ளன
- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இலகுரக தேஜாஸ் போர் விமானத்தின் இரண்டு பிரிவுகள்
- அதிக எடைகளைக் கொண்டுசெல்லும் சினூக்-குகள் மற்றும் தாக்குதல் நடத்தும் அபாச்சே ஹெலிகாப்டர்கள் மூலம் படையை வலுப்படுத்தியுள்ளது
- வான் வழியிலிருந்து நிலப்பகுதியிலுள்ள இலக்கை தாக்கி அழிக்கும் வகையிலான சூப்பர்சானிக் ஏவுகணையான பிரம்மோஸ் சேர்ப்பு
- எஸ்யூ-30எம்கேஐ விமானத்தில் வான்வழி கண்காணிப்பு ஏவுகணையான அஸ்த்ரா

  இந்திய விமானப்படை மற்றும் கடற்படைக்கான கண்ணுக்கு தெரியாத தொலைவில் இயக்குவதற்கான வான்வழி ஏவுகணை கட்டமைப்பான அஸ்த்ரா எம்கே-1ஐ வாங்குவதற்கு பாரத் டைனமிக்ஸ் நிறுவனத்துடன் ரூ.2,900 கோடி மதிப்பிலான ஒப்பந்தத்தை பாதுகாப்புத் துறை அமைச்சகம் மேற்கொண்டது
- வானிலிருந்து நிலப்பகுதியில் உள்ள இலக்கை தாக்கும் பிரம்மோஸ் ஏவுகணையுடன் கூடிய எஸ்யூ-30எம்கேஐ படைப் பிரிவை புதிதாக உருவாக்கியதன்மூலம், இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் பாதுகாப்புத் திறன் அதிகரிப்பு
- சி-130ஜே போக்குவரத்து விமானம் கொள்முதல்
- 56சி-295 மெகாவாட் போக்குவரத்து விமானத்தை வாங்குவதற்காக ஸ்பெயினின் ஏர்பஸ் பாதுகாப்பு மற்றும் விண்வெளி நிறுவனத்துடன் ஒப்பந்தம்
- இந்திய விமானப் படைக்கு நிலப்பகுதியிலிருந்து வான்வழியில் உள்ள இலக்கை தாக்கி அழிக்கும் நடுத்தர வகை ஏவுகணையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு வழங்கியது
- ராஜஸ்தானின் பார்மர் அருகே தேசிய நெடுஞ்சாலை-925ஏ-யில் போர் விமானங்கள் அவசரகால தரையிறங்கும் வசதி












# இந்தியக் கடற்படை
## கடற்படையின் சக்தி

- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட முதலாவது விமானம் தாங்கிக் கப்பலான ஐஏசி விக்ராந்தின் கடல் பகுதியில் இயக்கும் பரிசோதனை நிறைவு

- **புராஜெக்ட் 75**

  6 ஸ்கார்பீன் வகை நீர்மூழ்கிக் கப்பல்கள்

  6 நீர்மூழ்கிக் கப்பல்களில் ஐஎன்எஸ் களரி, ஐஎன்எஸ் கந்தேரி, ஐஎன்எஸ் கரன்ஜ், ஐஎன்எஸ் வேலா ஆகியவை பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன

  "வகிரின்" கடல் பரிசோதனை பிப்ரவரி 2022–ல் தொடக்கம்

  ஏப்ரல் 2022–ல் அறிமுகப்படுத்தப்பட்டது "வக்சீர்"

- **புராஜெக்ட் 15பி**

  ஏவுகணைகளுடன் இயங்கும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட போர்க்கப்பல்கள்

  ஐஎன்எஸ் விசாகப்பட்டினம்

  இந்தத் திட்டத்தின் முதன்மைக் கப்பலான ஐஎன்எஸ் விசாகப்பட்டினம், நவம்பர் 2021–ல் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது

  மர்முகோவ்

  முதலாவது கடல் பயண சோதனையை டிசம்பர் 2021–ல் நிறைவுசெய்தது

  சூரத்

  மே 2022–ல் சேவை தொடங்கப்பட்டது

- **புராஜெக்ட் 17ஏ**

  உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட கரவு கப்பல்கள்

  நீலகிரி


  செப்டம்பர் 2019–ல் சேவை தொடக்கம்

  ஹிம்கிரி

  டிசம்பர் 2020–ல் சேவை தொடக்கம்

  உதய்கிரி

  மே 2022–ல் சேவை தொடக்கம்



ஐஏசி விக்ராந்த்




ஐஎன்எஸ் விசாகப்பட்டினம்

# இந்திய ராணுவம்

## தனது திறனுக்கு மேலும் வலுசேர்ப்பு

- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட முக்கிய டாங்கி அர்ஜுன் (எம்கே-1ஏ)
  118 டாங்கிகளை விநியோகிப்பதற்காக சென்னையில் உள்ள கனரக வாகனங்கள் தொழிற்சாலைக்கு ரூ.7,523 கோடி மதிப்பிலான ஆர்டர்கள்
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் தொழில்நுட்ப பரிமாற்றத்துடன் தனியாரால் தயாரிக்கப்பட்ட பல்வகை கையெறி குண்டுகள்
- 1.86 லட்சம் குண்டுதுளைக்காத உடைகள் கொள்முதல்
- அமேதியில் ஏகே-203 ரக துப்பாக்கிகளை கூட்டாகத் தயாரிக்க ரூ.5,100 கோடி மதிப்பிலான திட்டத்துக்கு ஒப்புதல்
- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட, மனிதர்கள் எடுத்துச் செல்லும் வகையிலான, டாங்கிகளை அழிக்கும் ஏவுகணை செலுத்தும் அமைப்பு வெற்றிகரமாக பரிசோதனை
- நிலத்திலிருந்து வான் இலக்கைத் தாக்கி அழிக்கும் நடுத்தர வகை ஏவுகணை வெற்றிகரமாக இரண்டு முறை பரிசோதனை
- நிலத்திலிருந்து வான் இலக்கைத் தாக்கி அழிக்கும் நடுத்தர வகை ஏவுகணை வெற்றிகரமாக பரிசோதனை
- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட டாங்கிகளை தாக்கி அழிக்கும் ஏவுகணை ஹெலினா, பயன்பாட்டுக்கான பரிசோதனை



அர்ஜுன் டாங்கி (எம்கே-1ஏ)



வீரர்களே எடுத்துச் செல்லும் வகையிலான, டாங்கியை அழிக்கும் ஏவுகணை



வான்வழி ஏவுகணை (எம்ஆர்எஸ்ஏஎம்)




# இந்தியக் கடலோர காவல்படை

## கடலின் பாதுகாவலர்கள்

- 16 நவீன இலகுரக ஹெலிகாப்டர் (ஏஎல்எச் எம்கே-III) வழங்குவதற்கான ஒப்பந்தம் இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்துடன் செய்துகொள்ளப்பட்டது

  13 ஹெலிகாப்டர்கள் ஏற்கனவே சேர்க்கப்பட்டுள்ளன

  அனைத்து 16 ஹெலிகாப்டர்களும் ஒடிசா, குஜராத், கேரளா, தமிழ்நாடு ஆகிய நான்கு பிரிவுகளில் இருந்து இயக்கப்படவுள்ளன
- 24 போக்குவரத்து மோதல் தவிர்ப்பு முறை (டிசிஏஎஸ்)யின் நிர்மாணித்தல், ஒருங்கிணைத்தல், ஒப்பந்தம் இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்துடன் செய்துகொள்ளப்பட்டது

  13 ஐசிஜி டோர்னியர்கள் பணி முடிந்துள்ளன
- நிதியாண்டு 2014-2015-ல் 12 கடலோர ரோந்து வாகனங்கள் 05 விரைவு ரோந்து வாகனங்கள் 01 பயிற்சி கப்பல் ஆகியவை இயக்கப்பட்டுள்ளன
- நிதியாண்டு 2017-2022-க்கு இடையே 22 விரைவு ரோந்துவாகனங்கள் 02 மாசுகட்டுப்பாட்டு வாகனங்களுக்கான ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டுள்ளது
- கர்நாடகாவின் மங்களூர் அருகே கஞ்சாருவில் இந்தியக் கடலோர காவல்படைக்கான கல்வி கழகத்திற்கு கொள்கை அளவில் ஒப்புதல்
- ஐசிஜியுடன் ஒப்பந்தத்தில் உள்ள இந்தியாவின் தனிச்சிறப்பு பொருளாதார மண்டலத்தை பார்வையிட, ஆய்வு செய்ய, பறிமுதல் செய்வதற்கான சட்டப்பூர்வ அதிகாரம் வழங்குவதற்கு ஒப்புதல்

# செயல்பாடுகள்

### அண்டை நாடுகள் / வெளிநாட்டு கப்பல்களுக்கு உதவுதல்

**ஆபரேஷன் 'சாகர் ஆரக்ஷா-II' 2021**

**கொழும்பு கடற்கரைக்கு அப்பால் எம்வி எக்ஸ்-பிரஸ் பியர்ல் கப்பலில் தீயணைப்பு செயல்பாடு**

ஐசிஜி மற்றும் இலங்கை நிர்வாகத்தின் கூட்டு முயற்சி காரணமாக மிகப்பெரும் எண்ணெய் கசிவு தவிர்க்கப்பட்டது

**2021, ஆந்த்ரோத் செல்லும் வழியில் எம் வி கவரட்டி கப்பலில் தீவிபத்து ஏற்பட்ட போது ஐசிஜிஎஸ் சமர்த்தின் உதவி**

- ஐசிஜிஎஸ் முன்னாள் கப்பல் சமர்த் மூலம் உயிர்காப்பு படகை பயன்படுத்தி 274 பயணிகள் பாதுகாக்கப்பட்டனர்
- எம்வி கோரல் கப்பலுக்கு 350 பயணிகள் மாற்றம்

**ஆபரேஷன் சாகர் ஆரக்ஷா 2020, எம்டி நியூடைமண்ட் கப்பலில் தீயணைப்பு, இலங்கையின் கிழக்கு கடலோர பகுதிக்கு அப்பால் ஐசிஜி மற்றும் இலங்கை நிர்வாகத்தின் கூட்டு முயற்சியால் தீ அணைக்கப்பட்டது.**

### வங்காள விரிகுடாவில் (2022) அசானி புயலின் போது சிவில் நிர்வாகத்திற்கு உதவி

கடலில் உயிரிழப்பு மற்றும் உடைமை இழப்பு இல்லாமல் இருப்பதை உறுதிசெய்ய கூட்டான முயற்சிகள்

**எம்வி கால் (Gal) கட்டுமானம், 2021**

மும்பையிலிருந்து 47 நாட்டிகல் மைலுக்கு அப்பாலிருந்து ஐசிஜி சேட்டக் ஹெலிகாப்டர் மூலம் 102 ஊழியர்கள் மீட்பு

**'யாஸ்' புயல், 2021**

- **சிக்கித்தவித்த 77 பேர் மீட்கப்பட்டனர்**

**'டவுக்டே' புயல், 2021**

- **2020-ல் வங்கக்கடலின் தென்மேற்கு பகுதியில் புரவிப்புயலின் போது 147 பேர் மீட்கப்பட்டனர்**

ஐசிஜி—ன் தொடர் நடவடிக்கைகள் காரணமாக உயிரிழப்போ, உடைமை இழப்போ இல்லை.

### கடத்தலுக்கு எதிரான மற்றும் போதைப்பொருள் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

ஐசிஜி—ன் வலுவான கண்டுபிடிப்புகள் மற்றும் பதில் நடவடிக்கைகள்

- பல்வேறு செயல்பாடுகள் மூலம் **ரூ.13,557 கோடி** மதிப்புள்ள 5.7 டன் போதைப் பொருட்கள் வெற்றிகரமாக பறிமுதல் செய்யப்பட்டன
- இதுநாள் வரை மொத்தம் **ரூ.12,206 கோடி** மதிப்புள்ள போதைப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன

"

**ஆயுதங்களை இறக்குமதி செய்யும்போது, அதற்கான நடைமுறைகள் மிகவும் நீண்டது. இறக்குமதி செய்யும் போது அவற்றில் பெரும்பாலானவை நமது பாதுகாப்புப் படையில் சேர்வதற்குள் காலாவதியாகிவிடும். இதற்கான தீர்வு தற்சார்பு இந்தியா பிரச்சாரம் மற்றும் இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்திலேயே அமைந்துள்ளது. உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தளவாடங்களைக் கொண்டிருக்கும்போது, நமது பாதுகாப்புப் படையின் தன்னம்பிக்கையும் பெருமையும் பெருமளவில் உயரும்.**

**பிரதமர் திரு. நரேந்திர மோடி**

(பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தியில் தற்சார்பு இந்தியா என்ற கருத்தரங்கில்)



# பாதுகாப்புத் துறையில் தற்சார்பு இந்தியா - நனவாகும் கனவு

- 310 வகையான பாதுகாப்பு தளவாடப் பொருட்கள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட வேண்டும் என அறிவிப்பு
- 2022–23–ம் நிதியாண்டுக்கான பட்ஜெட்டில் தளவாடங்கள் கொள்முதலுக்கான ஒதுக்கீட்டில் உள்நாட்டில் கொள்முதல் செய்வதற்கான வரம்பு 68%–ஆக அதிகரித்து ரூ. 84,598 கோடி ஒதுக்கீடு
- உள்நாட்டுக் கொள்முதல் ஒதுக்கீட்டில் 25% அளவுக்கு (ரூ. 21,149 கோடி) தனியார் துறையினர், சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் மற்றும் புதுமைப்படைப்புடன் கூடிய புதிய நிறுவனங்களை ஊக்குவிக்க பயன்படுத்தப்படுகிறது.
- பாதுகாப்பு கொள்முதல் கொள்கைகள் 2020–ன் கீழ், வெளியிடப்பட்ட புதிய விதிகள் மூலம் கொள்முதல் நடவடிக்கைகள் அதிவேகமானதாக மாறியுள்ளன
- பாதுகாப்பு உற்பத்தி கட்டமைப்பை ஊக்குவிக்கும் வகையில், உத்தரப்பிரதேசம் மற்றும் தமிழ்நாட்டில் இரண்டு பாதுகாப்பு தொழில் வழித்தடங்கள் உருவாக்கம்
- பாதுகாப்புப் படையினருக்கான சவால்களுக்கு தீர்வுகாணும் வகையில், புத்தாக்கப் பணிகளை மேற்கொள்வோருக்காக பாதுகாப்பு புத்தாக்க புதுமைப்படைப்பு சவால் என்ற திட்டம் தொடக்கம்
- பாதுகாப்புத் துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான ஒதுக்கீட்டில் 25% அளவுக்கு தொழில் துறை, புதுமைப்படைப்புடன் கூடிய புதிய நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு







- **பாதுகாப்பு ஏற்றுமதி அளவு 334% அதிகரிப்பு**
  - (2014-15-ம் ஆண்டில் ரூ.1,941 கோடியாக இருந்த அளவு, 2020-21-ல் ரூ.8,434 கோடியாக அதிகரிப்பு)
  - தற்போது 84 நாடுகளுக்கு பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன
- ''இந்தியாவில் தயாரிப்போம், உலகுக்காக தயாரிப்போம்'' என்ற இலக்கை எட்டுவதற்காக புதிய பாதுகாப்பு தொழில் நிறுவனங்களை அமைப்பதற்கான உரிமம் கோரும் நிறுவனங்களுக்கு தானியங்கி முறையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டு அளவு 74%-ஆக அதிகரிப்பு மற்றும் அரசு வழியில் 100% அனுமதி
- 2022-23-ம் நிதியாண்டுக்கான மத்திய அரசின் பட்ஜெட்டில் மூலதன ஒதுக்கீடு அளவு 12.82% அதிகரித்து ரூ.1.52 லட்சம் கோடியாக அறிவிப்பு
- **தற்சார்பு இந்தியக் கடற்படை**
  - 2014-ம் ஆண்டில் இந்திய விற்பனையாளர்களுக்கு 76% தேவைக்கான ஒப்புதல் மற்றும் 66% செலவு அடிப்படையிலான ஒப்பந்தங்கள்
  - கடற்படை ஆயுதங்களில் 90% அளவுக்கு உள்நாட்டு தயாரிப்புகள்
  - கடந்த 5 ஆண்டுகளில் கடற்படையை நவீனமயமாக்குவதற்காக செலவிடப்படும் தொகையில் மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமான தொகை உள்நாட்டிலேயே கொள்முதல் செய்ய செலவிடப்படுகிறது
  - தயார்செய்வதற்கு ஆர்டர் செய்யப்பட்ட 41 கப்பல்கள்/ நீர்மூழ்கிக் கப்பலில் இந்திய கப்பல் கட்டும் தளங்களுக்கு 39 கப்பல்கள்/ நீர்மூழ்கிக் கப்பல்கள் தயாரிக்க பணி ஒதுக்கீடு





# சீர்திருத்தப் பாதையில் ஆயுதப் படைகள்

- பாதுகாப்புப் படைகளின் தலைமைத் தளபதி என்ற பதவி உருவாக்கப்பட்டது
- மிகப்பெரும் சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்காக ராணுவ விவகாரங்கள் துறை உருவாக்கப்பட்டது
- உள்நாட்டு சேவைகள் ஒருங்கிணைப்பு மற்றும் வளங்களை சிறப்பான முறையில் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதே நோக்கம்





# நிதி அதிகாரங்கள் மாற்றம்

- செயல்பாட்டுத் திறனை மேம்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள ராணுவ சேவை தலைமையகங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது

ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களை வாங்க ஆயுதப் படைகளுக்கு அவசரகால நிதி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது

துணைத் தளபதிகளுக்கான நிதி அதிகாரம் ரூ.500 கோடி வரை அதிகரிப்பு

பாதுகாப்புப் படை தலைமையகங்களுக்கு சிறப்பு அவசரநிலை அதிகாரங்கள்

பாதுகாப்புப் படை தலைமையகங்களுக்கு பொருட்களை கொள்முதல் செய்வதற்கான நிதி அதிகாரம் ரூ.300 கோடி வரையும், பாதுகாப்பு அமைச்சகத்துக்கு ரூ.2,000 கோடி வரையும் அதிகரிப்பு

# ஆயுதப் படை தொழிற்சாலைகள் ஒருங்கிணைப்பு மற்றும் ஊக்குவிப்பு

- 41 ஆயுதப்படை தொழிற்சாலைகள் மறுஉருவாக்கம் செய்யப்பட்டு, அக்டோபர் 2021-ல் புதிதாக உருவாக்கப்பட்ட 7 பாதுகாப்பு பொதுத் துறை நிறுவனங்களின்கீழ் தன்னாட்சி அதிகாரம் அளிக்கப்பட்டது

- இவை உருவாக்கப்பட்டு 6 மாதங்களுக்குள், 7-ல் 6 நிறுவனங்கள் லாபம் ஈட்டியுள்ளன




| வ.எண் | புதிய பாதுகாப்பு நிறுவனம் | எதிர்பார்க்கும் லாபம் (அக்.01, 2021- மார்ச் 31, 2022) ரூபாய் கோடியில் |
|---|---|---|
| 1 | வெடிமருந்துகள் இந்தியா நிறுவனம் | 28 |
| 2 | கவச வாகனங்கள் நிகாம் லிமிடெட் | 33.09 |
| 3 | இந்தியா ஆப்டெல் லிமிடெட் | 60.44 |
| 4 | அதிநவீன ஆயுதங்கள் மற்றும் சாதனங்கள் இந்தியா லிமிடெட் | 4.84 |
| 5 | கிளைடர்ஸ் இந்தியா லிமிடெட் | 1.32 |
| 6 | டுரூப் கம்ஃபர்ட்ஸ் லிமிடெட் | 26 |
| 7 | யந்த்ரா இந்தியா லிமிடெட் | (-)111.49 |

# பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறையில் புதிய கண்டுபிடிப்பு

## ருஸ்தம்-2 – பல இலக்கு ஆளில்லா வான்வழி வாகனம்

- நீண்டநேரம் செயல்பட வேண்டிய பகுதிகளுக்கு 24 மணிநேர செயல்பாட்டுத் திறன்

## நிர்பய்

ஒலியின் வேகத்தைவிட குறைவான வேகத்தில் செல்லும் நீண்ட தொலைவுக்கான க்ரூஸ் ஏவுகணை

- உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட இந்தியாவின் முதலாவது க்ரூஸ் ஏவுகணை
- 1,000 கிலோமீட்டர் தொலைவு
- 300 கிலோ அளவுக்கு ஆயுதங்களை ஏற்றிச் செல்லும் திறன் கொண்டது
- பல்வேறு தளங்களிலும் பயன்படுத்திக் கொள்ள முடியும்





## பிரம்மோஸ்

வான்வழியாக பயன்படுத்தப்படும் ஒலியின் வேகத்தைவிட வேகமாக செல்லும் க்ரூஸ் பிரம்மோஸ் ஏவுகணை

- ஒலியைவிட வேகமாக செல்லும் சுகோய் 30 எம்கே-1 விமானத்திலிருந்து செலுத்தப்பட்டு, வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது. இது உள்நாட்டுத் திறனை அதிகரிக்கச் செய்து செயல்திறனை மேம்படுத்தியுள்ளது.

## நிலத்திலிருந்து வானில் உள்ள இலக்கை அழிக்கும் நடுத்தர வகை ஏவுகணை

- ஐஎன்எஸ் கொச்சியிலிருந்து இயக்கி பரிசோதிக்கப்பட்டது
- கடலில் உள்ள ஏவுகணையை வழிமறிப்பது உள்ளிட்ட ஆயுதத் திறனை வெற்றிகரமாக வெளிப்படுத்தியது

## ஐஎன்எஸ் விக்ரமாதித்யா-வில் முதல்முறையாக தரையிறக்கப்பட்ட இலகு ரக விமானம்

- விரிவான பரிசோதனைகளுக்குப் பிறகு ஐஎன்எஸ் விக்ரமாதித்யா போர்க்கப்பலில் ஜனவரி 2020-ல் தரையிறக்கப்பட்டது

## அக்னி - 5

தரையிலிருந்து தரை இலக்கை நீண்டதூரம் சென்று தாக்கும் அதிவேக ஏவுகணை

- 2018-ம் ஆண்டில் மூன்று முறை வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது
- வெற்றிகரமாக 7 முறை இயக்கி பார்க்கப்பட்டது.

## நாக் ஏவுகணை

- நாக் என்பது டாங்கிகளை தாக்கி அழிக்கும் வகையிலான மூன்றாம் தலைமுறை ஏவுகணை. இதன் இறுதி பயன்பாட்டு பரிசோதனை பொக்ரான் பாலைவனத்தில் அக்டோபர் 2020-ல் மேற்கொள்ளப்பட்டது
- போர்க்களத்தில் ஏவுகணை இணைக்கப்பட்டு, டாங்கி-யின் இலக்கு குறிப்பிட்ட தொலைவில் வைக்கப்பட்டுள்ளது

## அஸ்த்ரா

வானிலிருந்து வான் இலக்கை கண்ணுக்கு புலனாகாத பகுதியில் தாக்கும் திறன் பெற்றது

- ஒரே தாக்குதலில் ஏராளமானவற்றை அழிக்கும் திறன்பெற்றது
- மிகுந்த உயரத்தில் செல்லும் அதிவேக வான்வழி இலக்குகளை அழிக்கும் திறனுடன் உருவாக்கப்பட்டது

## பினாகா ராக்கெட் அமைப்பு

- ஒடிசா கடற்கரையில் நவம்பர் 2020-ல் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது



## தரையிலிருந்து வான் இலக்கை விரைந்து தாக்கி அழிக்கும் கட்டமைப்பு

- நடுத்தர தொலைவு மற்றும் நடுத்தர உயரத்தில் விமானி இல்லாத விமான இலக்கை நேரடியாக தாக்கி அழித்து மிகப்பெரும் சாதனை படைத்துள்ளது

## தரையிலிருந்து நீண்ட தூர வான் இலக்கை தாக்கும் ஏவுகணை

- இந்திய கடற்படையின் வான் பாதுகாப்புத் திறனை வலுப்படுத்துவதற்காக இஸ்ரேல் வான்வெளி தொழில் நிறுவனத்துடன் இணைந்து பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு வடிவமைத்துள்ளது

## ஹெலினா (ராணுவ பயன்பாட்டு வகை), துருவாஸ்த்ரா (விமானப்படை பயன்பாட்டு வகை)

- செலுத்துவதற்கு முன்னதாக ஏவு வாகனத்தில் பொருத்தும் வகையிலான மற்றும் பிந்தைய நடவடிக்கைகள் தேவைப்படாத, டாங்கிகளை தாக்கி அழிக்கும் மூன்றாவது தலைமுறை ஏவுகணை
- இலக்கை நேரடியாகவும், உயர்ந்த பகுதியிலிருந்தும் தாக்க முடியும்

## வீரர்கள் எடுத்துச் செல்லும் வகையிலான, டாங்கிகளை அழிக்கும் ஏவுகணை

- வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டுள்ளது, உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட குறைந்த எடையிலான மற்றும் செலுத்தியதற்குப் பிந்தைய நடவடிக்கை தேவையில்லாதது

## ஆகாஷ் பிரைம் ஏவுகணை

- துல்லியமான தாக்குதலை மேம்படுத்துவதற்காக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ரேடியோ அலைவரிசை கண்டறியும் கருவி பொருத்தப்பட்டுள்ளது


## மனிதர்கள் எடுத்துச் செல்லும் வகையிலான, டாங்கிகளை அழிக்கும் ஏவுகணை

- இந்த ஏவுகணையின் இறுதி செயல்பாடுகள் குறித்து ஜனவரி 2022-ல் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு பரிசோதிக்கப்பட்டது



## பிராலே

- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தரையிலிருந்து தரை இலக்கை தாக்கி அழிக்கும் வகையிலான இந்த ஏவுகணையின் பரிசோதனை, டிசம்பர் 22, 2021-ல் மேற்கொள்ளப்பட்டது



# தொழில்நுட்ப பரிமாற்றம்

- தொழில்நுட்ப ஆவணங்கள் பரிமாற்றம் என்ற வடிவில், தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில், "எவ்வாறு செயல்படுவது" என்ற தகவல்கள் இடம்பெறுகின்றன
- வளர்ச்சியுடன்  உற்பத்தியில் இணைந்து செயல்படுவோர் /வளர்ச்சிக்காக இணைந்து செயல்படுவோர்/ உற்பத்தி முகமைகளுக்கு பயிற்சிக்கான எந்தவொரு கட்டணமும் இன்றி, தொழில்நுட்ப பரிமாற்றம் செய்யப்படுகிறது. மற்ற நிறுவனங்களுக்கு ஒட்டுமொத்த திட்டச் செலவில் 5% அளவுக்கு ஒரு முறை பயிற்சிக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.
- பாதுகாப்புப் படைகள் மற்றும் பிற அரசு துறைகளுக்கு விற்கப்படும் பொருட்களுக்கு உரிமைக் கட்டணம் எதுவும் விதிக்கப்படுவதில்லை. பொதுவாக, இந்திய வர்த்தக சந்தையில் மேற்கொள்ளப்படும் விற்பனை மற்றும் ஏற்றுமதிக்கு 2% உரிமைக் கட்டணம் பொருந்துவதாக இருக்கும்.

# தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியம்

- பாதுகாப்புப் பொருட்களை உள்நாட்டிலேயே தயாரிக்க இந்திய தொழில் நிறுவனங்களுக்கு, குறிப்பாக, சிறு, குறு நடுத்தர நிறுவனங்களுக்கு வழிவகை செய்ய ரூ.100 கோடியில் நிதியம் உருவாக்கப்பட்டது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு, பாதுகாப்புப் படைகள் மற்றும் பாதுகாப்புப் பொதுத்துறை நிறுவனங்களின் தேவைக்கு ஏற்ப புதிய தொழில்நுட்பங்களை உருவாக்குவதற்கு இந்த நிதியைப் பயன்படுத்தலாம்.
- தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியத்தின்கீழ், ஒவ்வொரு திட்டத்துக்கும் செலவு செய்வதற்கான வரம்பு ரூ.10 கோடியிலிருந்து ரூ.50 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

# இந்திய தொழில் நிறுவனங்களுக்கு டிஆர்டிஓ காப்புரிமை

- அனைத்து காப்புரிமை மற்றும் அதுதொடர்பான அறிவுசார் வெளியீடுகள் பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பின் வலைதளத்தில் உள்ளது. இதனை இந்திய தொழில் நிறுவனங்கள் எந்தவொரு செலவுமின்றி பயன்படுத்திக் கொள்ளலாம்.



“

2016-ல் நடத்தப்பட்ட துல்லிய தாக்குதல், 2019-ல் நடத்தப்பட்ட பாலகோட் தாக்குதல் ஆகியவை வெறும் ராணுவ நடவடிக்கை இல்லை. இவை, எல்லைதாண்டிய தீவிரவாத கட்டமைப்பை இந்தியாவுக்கு எதிராக எளிதில் போரிடும் பாதுகாப்பான இடமாக பயன்படுத்தினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து வலிமையாக எடுத்துரைக்கும் செய்தியாக உள்ளது.

**பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்**

**(போரும் இல்லை, அமைதியும் இல்லை என்ற சூழலில் விமானப்படையின் சக்தி என்பது குறித்த கருத்தரங்கில்)**



# அமைதிக்காக பாதுகாப்புப் படைகள் பயன்பாடு

## 2016-ல் நடத்தப்பட்ட துல்லியத் தாக்குதல்

- உரி பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் செப்டம்பர் 28-ம் தேதி இரவில் இந்திய ராணுவம் துல்லியத் தாக்குதல் நடத்தியது. இது இந்தியாவின் நிலைப்பாட்டை சிந்தனையாளர் என்ற நிலையிலிருந்து செயல்பாட்டாளராக மாற்றியது





## 2019-ல் பாலகோட் வான்வழித் தாக்குதல்

2016-ல் நடத்தப்பட்ட உளவுத்துறை அளித்த தகவல்களின் அடிப்படையில், பாலகோட் பகுதியில் ஜெய்ஷ்-இ-முகம்மது அமைப்பின் மிகப்பெரும் பயிற்சி முகாம் மீது பிப்ரவரி 26, 2019 அதிகாலையில் இந்தியா தாக்குதல் நடத்தியது. துல்லியத் தாக்குதல்

- பிப்ரவரி 14, 2019-ல் புல்வாமா-வில் ஜெய்ஷ்-இ-முகம்மது தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப் படைத் தாக்குதலில் சிஆர்பிஎஃப் வீரர்கள் 40 பேர் உயிர்த்தியாகம் செய்தனர். இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில், பாதுகாப்புப் படையினர் தாக்குதல் நடத்தினர்

# ‘மீட்பராக’ திகழும் பாதுகாப்புப் படைகள்

## ஆபரேஷன் கங்கா

- போரால் பாதிக்கப்பட்ட உக்ரைனில் பாதிக்கப்பட்ட இந்தியர்கள் 2,457 பேரை, தனது சி17 வகை விமானங்களை 24 முறை இயக்கி இந்திய விமானப்படை மீட்டுள்ளது.

## ஆப்கானிஸ்தானிலிருந்து மீட்பு

- 2021-ம் ஆண்டில் உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்ட ஆப்கானிஸ்தானிலிருந்து 579 இந்தியர்களை 21 விமானங்கள் மூலம் இந்திய விமானப்படை மீட்டது

## ஆபரேஷன் மைத்ரி

- 2015-ம் ஆண்டில் கடும் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட நேபாளத்தில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு தனது விமானங்களை இந்திய விமானப்படை பயன்படுத்தியது. இந்திய விமானப்படையின் பல்வேறு விமானங்கள்/ ஹெலிகாப்டர்களை 1,638 முறை இயக்கி, 5,973 பேரை மீட்டது.









# கொரோனா: கண்ணுக்குத் தெரியாத எதிரியுடன் போர்

## 2020-ல் முதலாவது அலை

- இந்திய விமானப்படை மற்றும் இந்திய கடற்படை

  சீனா மற்றும் பிற நாடுகளிலிருந்து 4,200 இந்தியர்கள் மீட்பு
  584 விமான சேவைகள் மூலம் 862 டன் பொருட்களை 780 மணிநேரம் பறந்து சர்வதேச மருத்துவ நிவாரணமாக இந்திய விமானப்படை அனுப்பிவைத்துள்ளது

- பாதுகாப்புப் படைகளின் மருத்துவ சேவைப் பிரிவினர் நடத்திய தனிமைப்படுத்துவதற்கான வசதிகள்
- கொரோனா சிகிச்சை வசதிகள் மற்றும் கிருமிநாசினிகள், முகக்கவசம் போன்ற பிற தனிநபர் பாதுகாப்பு சாதனங்களை டிஆர்டிஓ மற்றும் பாதுகாப்புப் படை பொதுத்துறை நிறுவனங்கள் உற்பத்தி செய்தன

## 2021-ல் இரண்டாவது அலை

- நாட்டுக்கு உள்ளே–யும், வெளிநாடுகளுக்கும் ஆக்சிஜன் கன்டெய்னர்கள் மற்றும் பிற மருத்துவ உபகரணங்களை இந்திய விமானப் படையும், இந்திய கடற்படையும் எடுத்துச் சென்றன

  13 நாடுகளுக்கு 1.4 மில்லியனுக்கும் மேற்பட்ட வான் மைல் தொலைவுக்கு 3,757 மணிநேரம் பறந்து 15,306 டன் அளவுக்கு பொருட்களை விநியோகித்துள்ளது

  ஆபரேஷன் சமுத்ர சேது–II

  இந்திய கடற்படையைச் சேர்ந்த 10 போர்க் கப்பல்கள், இரண்டு மாதங்களுக்கு பணியில் ஈடுபடுத்தப்பட்டு, 53,000 கடல்மைல் தொலைவுக்கு மேல் (சுமார் 1 லட்சம் கி.மீ.,) பயணம் மேற்கொண்டுள்ளது

- நாடு முழுவதும் டிஆர்டிஓ, பாதுகாப்புத் துறை பொதுத்துறை நிறுவனங்கள், கன்டோன்மென்ட் வாரியங்கள் ஆகியவை கொரோனா சிகிச்சை மையங்களை ஏற்படுத்தின
- நாடு தழுவிய அளவில் 1,200 ஆக்சிஜன் உற்பத்தி ஆலைகளை போர்க்கால அடிப்படையில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு ஏற்படுத்தியது
- கொரோனா–வுக்கு சிகிச்சை அளிக்கும் 2–டியாக்சி–டி–குளுகோஸ் (2–டிஜி) மருந்தை டிஆர்டிஓ உருவாக்கியது
- பொது நிர்வாகத்துக்கு ஆதரவு அளிக்கும் வகையில், தேசிய மாணவர் படையினர் ஈடுபடுத்தப்பட்டனர்
- பாதுகாப்புப் படையில் உள்ள வீரர்கள் அனைவரும் சிறப்பான முறையில் தடுப்பூசி செலுத்திக் கொண்டனர்.



# மனிதநேய உதவி மற்றும் பேரிடர் நிவாரணம்

- தேசிய கடல்சார் நலன்களைப் பாதுகாக்கும் வகையில், இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் இந்திய கடற்படை மேற்கொள்ளும் இலக்கு அடிப்படையிலான பணியமர்த்துதல்
- ஹோர்முஸ் மற்றும் வளைகுடா பிராந்தியத்தில் உள்ள நீரிணை வழியாக பயணிக்கும் இந்திய வர்த்தக கப்பல்களின் பாதுகாப்பு மற்றும் நலனை உறுதிப்படுத்த இந்திய கடற்படை மேற்கொள்ளும் "ஆபரேஷன் சங்கல்ப்"
- மருத்துவ ஆக்சிஜன் விநியோகத்தை வலுப்படுத்த இந்திய கடற்படை மேற்கொண்ட ஆபரேஷன் சமுத்ர சேது–II

  10 போர்க்கப்பல்கள், சுமார் 2 மாதங்களுக்கு பணியில் ஈடுபடுத்தப்பட்டு, 53,000 கிலோமீட்டருக்கும் மேலான தொலைவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளது
- "ஆக்சிஜன் எக்ஸ்பிரஸ்"

  கொரோனா காலத்தில் லட்சத்தீவு மற்றும் மினிகாய் தீவுப் பகுதிகளுக்கு ஆக்சிஜன் சிலிண்டர்கள் விநியோகத்தை உறுதிப்படுத்த தெற்கு கடற்படை தளத்திலிருந்து ஐஎன்எஸ் சார்தா, எம்பிவி மேக்னா ஆகியவை பணியில் ஈடுபடுத்தப்பட்டன
- மிஷன் சாகர்

  இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் உள்ள 5 நாடுகள் மற்றும் தெற்கு சீனக் கடல் பகுதிக்கு திரவ மருத்துவ ஆக்சிஜன் மற்றும் பிற மருத்துவ உபகரணங்களைக் கொண்டு செல்லும் பணியில் இந்திய கடற்படை ஈடுபடுத்தப்பட்டது
- பல்வேறு நாடுகளுக்கும் 1.5 லட்சம் கொரோனா தடுப்பூசிகளை அனுப்பிவைக்கும் பணியில், இந்திய கடற்படையின் பி–8ஐ விமானம் ஈடுபடுத்தப்பட்டது.









## விங் கமாண்டர்

# அஞ்சலி சிங்

வெளிநாட்டில் இந்திய தூதரகங்களில் பணியமர்த்தப்பட்ட முதல் பெண் என்ற பெருமைக்குரியவர். (மாஸ்கோ-வில் உள்ள இந்திய தூதரகத்தில் விமானப்படை அதிகாரி)

## லெப்டினன்ட்

# பவானா கஸ்தூரி

2019-ல் நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பின்போது அனைத்து ஆண் வீரர்கள் படைப் பிரிவுக்கு (ராணுவ சேவைகள் படை) தலைமைவகித்த முதல் பெண் அதிகாரி






## கேப்டன்
# அபிலாஷா பராக்

நாசிக்-கில் உள்ள போர் ராணுவ விமான பயிற்சிப் பள்ளியில் பட்டம் பெற்றபிறகு, ராணுவ விமானப் படைப் பிரிவில் போர் விமானியாக சேர்ந்த முதல் பெண்.

## கேப்டன்
# தனியா ஷெர்கில்

2020-ல் நடைபெற்ற ராணுவ தின விழாவில் அனைத்து ஆண் படைப் பிரிவுக்கு தலைமைவகித்த முதல் இந்திய பெண் அதிகாரி





லெப்டினன்ட் கமாண்டர்

## கராபி கோகோய்

மாஸ்கோ-வில் உள்ள இந்திய தூதரகத்தில் உதவி கடற்படை அதிகாரியாக நியமிக்கப்பட்டார். வெளிநாட்டில் உள்ள இந்திய தூதரகங்களில் பணியமர்த்தப்பட்ட முதல் பெண் கடற்படை அதிகாரி



ஃபிளைட் லெப்டினன்ட்

## ஷிவாங்கி சிங்

ரஃபேல் போர் விமானத்தின் முதலாவது இந்திய பெண் விமானி. 2022-ம் ஆண்டு குடியரசு தின அணிவகுப்பில் இந்திய விமானப் படையின் அலங்கார வாகனத்தில் வந்ததன் மூலம், பெண் சக்தியின் வளர்ச்சி வெளிப்படுகிறது

## விமானப்படை அதிகாரிகள்
# தற்போது விமானப்படை லெப்டினன்ட்கள்

அவானி சதுர்வேதி, பவானா காந்த், மோகனா சிங் ஆகியோர் போர் விமானிகளாக பணியமர்த்தப்பட்ட முதல் மூன்று பெண் விமானிகள்.



விமானப்படை லெப்டினன்ட்கள்

பவானா காந்த் அவானி சதுர்வேதி மோகனா சிங்



# தேசிய போர் நினைவுச் சின்னம்

## உயிர்த்தியாகம் செய்தவர்களுக்கு உரிய மரியாதை

## தொடக்கம் முதல் நிறைவு வரை

- பாதுகாப்புப் படைகளில் உயிர்த்தியாகம் செய்தவர்களை கவுரவிக்கும் வகையில், புதுதில்லியில் தேசிய போர் நினைவுச் சின்னத்தை பிப்ரவரி 25, 2019–ல் பிரதமர் நரேந்திர மோடி நாட்டுக்கு அர்ப்பணித்தார்
- சுதந்திர இந்தியாவில் உயிர்த்தியாகம் செய்த 26,000–க்கும் மேற்பட்டோருக்கு இது மரியாதை செலுத்துகிறது
- ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீரரின் பெயர், தியாக சக்கரத்தில் எழுதப்படும். அந்த வீரரின் ரத்த சொந்தங்கள் அழைக்கப்பட்டு, அன்றைய மாலைப் பொழுதில் அணையாத ஜோதியில் மரியாதை செலுத்த ஏற்பாடு செய்யப்படும்.
- தேசிய போர் நினைவுச் சின்னத்தில் உள்ள அணையாத ஜோதியுடன், இந்தியா கேட் பகுதியில் இருந்த அமர் ஜவான் ஜோதியானது ஜனவரி 2022–ல் இணைக்கப்பட்டது
- போர் வெற்றியின் 50–ம் ஆண்டு கொண்டாட்டங்கள், சிறப்பான முறையில் நடைபெற்றன




# இளைஞர்கள் தலைமையிலான வளர்ச்சி

## சைனிக் பள்ளிகள் மற்றும் தேசிய மாணவர் படை

- தேசிய கல்விக் கொள்கையின் அடிப்படையில் தரமான கல்வியை வழங்குவதற்காக கூட்டு முறையில் நாடு தழுவிய அளவில் புதிதாக 100 சைனிக் பள்ளிகள் திறக்கப்பட உள்ளன
    - ஒவ்வொரு மாநிலம்/யூனியன் பிரதேசத்தில் குறைந்தபட்சம் ஒரு பள்ளியை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது
    - 21 பள்ளிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 2022-23-ம் கல்வியாண்டு முதலே மாணவர் சேர்க்கைக்கான பணிகள் தொடங்கியுள்ளன
    - புதிதாக ஒப்புதல் அளிக்கப்பட்ட 10 சைனிக் பள்ளிகளில் மாணவர் சேர்க்கைக்காக 485 மாணவர்களின் முதல் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது
- தேசிய மாணவர் படையில் ஒரு லட்சம் வீரர்களை சேர்க்கும் வகையிலான விரிவாக்கத் திட்டம்
    - 1,283 பள்ளிகள்/ கல்லூரிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன (எல்லைப் பகுதியில் 896, கடலோரப் பகுதிகளில் 255, விமானப்படை வட்டங்களில் 132)
- வீரர்களுக்கு மிகப்பெரும் தேச விழிப்புணர்வை ஏற்படுத்தவும், சர்வதேச அளவில் புரிந்துணர்வை உருவாக்கவும் தேசிய மாணவர் படைக்கும் இளைஞர் பரிமாற்றத் திட்டம் விரிவாக்கம்



# ஒரு பதவி ஒரு ஓய்வூதியம் திட்டம்

- பாதுகாப்புப் படைகளில் பணியாற்றி ஓய்வுபெற்ற வீரர்களுக்கு சம தகுதி மற்றும் சமஆண்டுகள் சேவையில் இருந்தவர்களுக்கு, எந்தத் தேதியில் ஓய்வுபெற்றார்கள் என்ற கணக்கில் இல்லாமல், ஒரே மாதிரியான ஓய்வூதியம் வழங்கப்படுகிறது
- ஒரு பதவி ஒரு ஓய்வூதியம் திட்டத்தை அமல்படுத்தியபோது, 20.6 லட்சத்துக்கும் மேற்பட்ட ஓய்வூதியதாரர்கள்/ குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு நிலுவைத் தொகையாக ரூ.10,795 கோடி வழங்கப்பட்டது
- ஒரு பதவி ஒரு ஓய்வூதியம் திட்டத்தை அமல்படுத்தியதால் ஆண்டுக்கு ரூ.7,123 கோடி செலவு ஏற்படுகிறது

## ஸ்பார்ஷ் திட்டம் தொடக்கம்


- பாதுகாப்புப் படையினருக்கான ஓய்வூதியத்துக்கு ஒப்புதல் வழங்குவது மற்றும் ஓய்வூதியத்தை வழங்குவதற்கான தானியங்கி முறைக்கான ஒருங்கிணைந்த அமைப்பு
- ஓய்வூதியம் தொடர்பான கோரிக்கைகளை பரிசீலித்து, பாதுகாப்புப் படை ஓய்வூதியதாரர்களுக்கு எந்தவொரு வெளிஆட்கள் தலையீடு இன்றி, நேரடியாக வங்கிக் கணக்கில் ஓய்வூதியம் வரவுவைக்கப்படும்
- கட்டமைப்பில் சுமார் 5 லட்சம் பாதுகாப்புப் படை ஓய்வூதியதாரர்களை வெற்றிகரமாக சேர்த்து மிகப்பெரும் இலக்கை ஸ்பார்ஷ் எட்டியுள்ளது
  - 2020–21–ம் நிதியாண்டில் வெறும் ரூ.57 கோடி வழங்கப்பட்ட நிலையில், 2021–22–ம் நிதியாண்டில் ரூ.11,600 கோடிக்கும் அதிகமான தொகை விடுவிக்கப்பட்டுள்ளது.





# பாதுகாப்பான இந்தியாவுக்காக எல்லை மேம்பாடு

- கடந்த 2014-ம் ஆண்டு ஏப்ரல் முதலே 6,763 கிலோமீட்டர் தொலைவுக்கான சாலைகளை எல்லை சாலைகள் அமைப்பு கட்டமைத்துள்ளது. இதில், இந்தியா-சீனா எல்லைப்பகுதியில் 1,400 கிலோமீட்டருக்கும் அதிகமான 32 சாலைகளும், மிகப்பெரும் பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த 5,300 கிலோமீட்டருக்கும் அதிக தொலைவுக்கான பிற சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன.
- 2021-22-ம் ஆண்டில் 87 பாலங்கள், 15 சாலைகள் என ஒட்டுமொத்தமாக 102 கட்டமைப்புத் திட்டங்களை எல்லை சாலைகள் அமைப்பு நிறைவேற்றியுள்ளது. பெரும்பாலும் ஒரே ஆண்டில் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.
- 10 ஆயிரம் அடிக்கும் மேல் அமைக்கப்பட்ட உலகின் மிக நீண்ட சுரங்கமான அடல் சுரங்க வழிப் பாதை, ரோஹ்தங்-கில் அக்டோபர் 2020-ல் செயல்பாட்டுக்கு வந்தது. இதன்மூலம், அனைத்து வானிலையிலும் லே பகுதிக்கு மாற்றுப் பாதையான நிமு-பதம்-தர்ச்சா சாலை மற்றும் லஹால் - ஸ்பிட்டி வழியாக செல்ல வழி ஏற்பட்டுள்ளது.
- உலகின் மிக உயரமான பகுதியில் மோட்டார் வாகனங்கள் செல்லும் சாலையானது, லடாக் பகுதியில் கட்டமைக்கப்பட்டது. 19,300 அடி உயரத்தில் உம்லிங் லா பகுதியை கடந்துசெல்லும் வகையில் இது அமைக்கப்பட்டது. 52 கிலோமீட்டர் தொலைவுக்கான பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த இந்த சாலை, எல்லைக் கிராமங்களை இணைக்கிறது.




அடல் சுரங்கவழிச் சாலை




உம்லிங் லா டாப்

- பலிபாரா – சர்த்வார் – தவங் சாலையில் சேலா சுரங்க வழிப் பாதை கட்டுமானப் பணிகள் தொடங்கியுள்ளன. 13,960 அடி உயரத்தில் உள்ள சேலா கணவாயைக் கடந்து தவாங் பகுதிக்கு அனைத்து வானிலையிலும் செல்வதற்கு இந்த சாலை வகை செய்கிறது
- அருணாச்சலப்பிரதேசத்தில் நெச்சிப்பு சுரங்க வழிப் பாதை அமைப்பதற்கான தோண்டும் பணிகள், மே 2022–ல் வெற்றிகரமாக நிறைவடைந்தன. 5,700 அடி உயரத்தில், மேற்கு கமேங் மாவட்டத்தில் பலிபாரா – சர்த்வார் – தவாங் சாலையில் 500 மீட்டர் நீளத்துக்கு சுரங்கம் அமைகிறது. இதில், நவீன விளக்குகள் மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.
- சிக்கிம் மாநிலத்தில் 11,000 அடி உயரத்தில் ஃபிளேக் ஹில்– டொக்காலா சாலையில் 140 அடி நீளத்துக்கு உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இருவழி தொகுப்பு பாலமானது போக்குவரத்துக்கு திறக்கப்பட்டது.
- புதுதில்லியில் உள்ள எல்லை சாலைகள் அமைப்பின் தலைமையகத்தில் சாலை பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வுக்கான உயர்சிறப்பு மையம் மற்றும் சாலைகள், மேம்பாலங்கள், விமான ஓடுதளங்கள், சுரங்கங்களுக்கான உயர் சிறப்பு மையம் ஆகியவை திறக்கப்பட்டன.



சேலா சுரங்கவழிப் பாதை



நெச்சிபு சுரங்கவழிப் பாதை



## டிஜிட்டல்மயத்துக்கு மாறிய பாதுகாப்பு அமைச்சகம்


### எளிதாக வாழ்வதற்கான தொழில்நுட்பம்

- வெளிப்படையான வழிமுறைகள்
- அதிவேக நடவடிக்கைகள்
- எந்தவொரு தலையீடும் இல்லாமை
- மின்னணு–சவானி திட்டம்

  62 கன்டோன்மென்ட் வாரியங்களில் வசிக்கும் 20 லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு ஆன்லைன் மூலம் குடிமக்கள் சேவையை வழங்குவதற்காக இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது
- லேன் நெட்வொர்க்


  பாதுகாப்புத் துறை, முன்னாள் ஒய்வூதியதாரர்கள் நலத் துறை, பாதுகாப்பு நிதித்துறை உள்ளிட்டவற்றில் தனிப்பட்ட இன்டர்நெட் மற்றும் இன்ட்ராநெட் தளங்கள் செயல்பாட்டுக்கு வந்துள்ளன

- வான்வழி மதிப்பீடு தேவைப்படும் வளர்ச்சித் திட்டங்களுக்கான பாதுகாப்புத் துறையின் ஒப்புதலை ஒழுங்குபடுத்துவதற்காக புவி தகவல் அமைப்பு அடிப்படையிலான ஆன்லைன் விண்ணப்பப் பதிவுக்கான வலைதளம்
- வான்வழி மதிப்பீடு, மின்சாரத் திட்டங்கள், ஆராய்ச்சி மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கு அனைத்து தடையில்லா சான்றுகளும் ஆன்லைன் முறையில் வழங்கப்படுகின்றன
- உறுதியான தேவையின் அடிப்படையில் (ஏஎஃப்டி) கேன்டீனிலிருந்து பொருட்களை (கார்கள், மோட்டார் சைக்கிள்கள் போன்றவற்றை) வாங்குவதற்கு வலைதளம் தொடக்கம்
- கேன்டீனில் விற்கப்படும் முக்கியப் பொருட்கள் அனைத்துக்கும் 100% டிஜிட்டல் முறையில் பணம் செலுத்த ஏற்பாடு; ஏஎஃப்டி அல்லாத பொருட்களுக்கு 99% அளவுக்கு டிஜிட்டல் முறை அமல்



# பாதுகாப்புத் துறை நிலம் மற்றும் எஸ்டேட் துறையில் சாதனைகள்

- பாதுகாப்பு மேலாண்மை தொடர்பான அனைத்து பரிந்துரைகளின் தகவல்களைப் பெறுவதற்காக நில மேலாண்மை அமைப்பு அறிமுகம்
- பாதுகாப்புத் துறை நில ஆய்வுப் பணிகளின் இரண்டாவது கட்டமானது, மிகவும் குறுகிய காலத்துக்குள் அதாவது டிசம்பர் 31, 2021–க்குள் நிறைவடைந்தது
- பாபா அணுஆராய்ச்சி மையத்துடன் இணைந்து நேர அடிப்படையிலான செயற்கைக்கோள் படங்களைக் கொண்டு, மாற்றத்தை கண்டறியும் மென்பொருள் மூலம், ஆக்கிரமிப்புகளை அடையாளம் காண்பதற்கு புதிய வழிமுறைகள்
- தில்லி கன்டோன்மென்ட்டில் உள்ள பாதுகாப்பு எஸ்டேட் மேலாண்மைக்கான தேசிய கல்வி நிறுவனத்தில் நவீன நில அளவீட்டு தொழில்நுட்பத்துக்கான உயர்கல்வி மையத்தை விரைவில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது



பாபா அணு ஆராய்ச்சி மையம்




பாதுகாப்பு சொத்து மேலாண்மைக்கான
தேசிய கல்வி நிறுவனம், தில்லி கன்டோன்மென்ட்.

"தற்சார்புடன் இருக்க வேண்டும் என்று இந்தியா பேசும்போது, சுயநல நடைமுறையை வலியுறுத்தவில்லை. இந்தியாவின் தற்சார்பு என்பது, ஒட்டுமொத்த உலகின் மகிழ்ச்சி, கூட்டுறவு மற்றும் அமைதி குறித்ததே ஆகும்."

**பிரதமர் திரு. நரேந்திர மோடி**

(75-வது சுதந்திர தின உரை)




பாதுகாப்பு
அமைச்சகம்
सत्यमेव जयते
DIRECTORATE OF PUBLIC RELATIONS
MINISTRY OF DEFENCE
8
சிறந்த செயல்பாட்டின்
ஆண்டுகள்
@SpokespersonMoD
@DefenceMinIndia
MinistryofDefenceGovernmentofIndia